சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08
ந.க.எண்.2116/ஆ5/2022 நாள். .04.2022

-----

பொருள்: பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - மே-2022 - பொதுத் தேர்வு - மேல்நிலை முதலாம் / இரண்டாம் ஆண்டு / பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு - தேர்வு மையங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு செயல்பாடுகள் - தனிக்கவனம் - தேர்வு மையத் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துதல் - தொடர்பாக.

பார்வை: சென்னை-06, அரசுத் தேர்வுத் துறை இயக்குநரின் கடித ந.க.எண்.24893/எச்4/2021 நாள்.21.03.2022.

-----

பார்வையில் காணும் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரின் கடிதத்தின்படி, மே-2022 ஆம் ஆண்டு பொதுத் தேர்வு மேல்நிலை இரண்டாம் ஆண்டு 05.05.2022, மேல்நிலை முதலாம் ஆண்டு 10.05.2022 மற்றும் 10 ஆம் வகுப்பு 06.05.2022 அன்றும் தொடங்கி நடைபெற உள்ளது. தேர்வு பணிக்கு தலைமையாசிரியகள் / முதுகலை / பட்டதாரி ஆசிரியர்கள் / சிறப்பாசிரியர்கள் / ஆசிரியரல்லாத பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுத் தேர்வு நடைபெறும் தேர்வு மையத் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் தேர்வுகள் செவ்வனே எவ்விதத் தொய்வுமின்றி நடைபெற கீழ்காணும் முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. பள்ளியில் உள்ள அனைத்து தேர்வறைகளும் சுத்தமாக (சுவற்றில் எவ்வித Chart / கல்விசார் விளக்கப்படங்கள் / வரைபடங்கள் / எழுதப்பட்ட விவரங்களும் இல்லாமல்) இருக்க வேண்டும்.
2. பள்ளி வளாகம் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். ஆழ்குழாய் கிணறு / பள்ளம் / மின்கம்பிகள் தொங்கிய நிலையில் இருந்தால் இவை பாதுகாப்பான முறையில் இருக்க வேண்டும்.
3. தேர்வுக் கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட அனைத்து தேர்வுப் பணிக்கு பயன்படுத்தும் அறைகளும், அறைகளிலுள்ள மேசை/ நாற்காலி / பெஞ்ச் உள்ளிட்ட அனைத்துத் தளவாடப் பொருட்களும் சுத்தம் செய்யப்பட்டு பழுது இல்லாமல் பயன்படுத்தும் நிலையில் இருக்க வேண்டும்.
4. அனைத்து தேர்வு அறைகளின் நுழைவாயிலில் தேர்வர்கள் பார்வையில் படும்படி அறை எண் எழுதப்பட்டு இருக்க வேண்டும்.
5. தேர்வுப் பணிக்கு பயன்படுத்தும் எந்த அறையிலும் தேர்வுப் பணிக்கு சம்பந்தமில்லாத எந்த ஒரு புத்தகமோ அல்லது காகிதமோ இருத்தல் கூடாது. பிற பணிகளுக்கு பயன்படுத்தும் அலமாரி இருந்தால் பூட்டப்பட்டு சீல் வைத்து இருக்க வேண்டும். தேர்வு நடைபெறும் நாட்களில் அதை பயன்படுத்தும் விதமாக எவரும் அந்த அறையினுள் நுழையக் கூடாது.
6. இரண்டு தேர்வு அறைகளுக்கு நடுவில் சுத்தமான குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். குடிநீர் பாத்திரம் தினந்தோறும் கழுவி சுத்தம் செய்யப்பட வேண்டும்.
7. தேர்வர்கள் கட்டாயம் பள்ளிச் சீருடையில் வருகை புரிய வேண்டும்.
8. தேர்வர்கள் தேர்வறைக்குள் செல்லும் முன் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதற்கு ஆண் / பெண் இருபாலருக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.
9. தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் கைப்பேசியை தேர்வறைக்குள் எடுத்துவரக் கூடாது என தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தி இருக்க வேண்டும்.

10. குடிநீர் வசதி, கழிப்பறை சுத்தம் பேணுதல், வளாகத் தூய்மை, வகுப்பறைத் தூய்மை, தேர்வர்களை கூட்டம் கூடாதவாறு ஒழுங்குபடுத்துதல் போன்ற அனைத்து பணிகளுக்கும் பொறுப்பான நபர்களை பணியமர்த்தி அவர்களின் பெயர் / கைப்பேசி எண் விவரங்களை தேர்வுக் கட்டுப்பாட்டு அறையில் ஒட்டி வைக்கப்பட வேண்டும். இப்பணிகள் எவ்வித தொய்வுமின்றி நடைபெறுவதை தினந்தோறும் உறுதி செய்யும் ஒரு ஒருங்கமைக்கும் (Nodal Officer) பணியாளரின் பெயர் / கைப்பேசி எண்ணையும் தேர்வுக்கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட வேண்டிய Log Book இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

11. தேர்வுக் கட்டுப்பாட்டு அறையில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டிய பொருட்கள் / ஆவணங்கள்.

(i) தேவையான இருக்கைகள் / மேசைகள்

(ii) வினாத்தாள் கட்டுகளை பாதுகாப்பாக வைக்க அலமாரி (பூட்டு சாவியுடன்), விடைத்தாட்கள் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு என தனித்தனி அலமாரியில் பூட்டி வைக்கப்பட வேண்டும்.

(iii) ஒவ்வொரு தேர்விற்கும் தேவையான விடைத்தாட்களை முன் தினமே தயார் நிலையில் (அந்தந்த பாடத்திற்குரிய) எடுத்து பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும் (பூட்டிய அலமாரியில்)

(iv) சீலிட உதவும் துணி / ஊசி – நூல் / அரக்கு / மெழுகுவர்த்தி / தீப்பெட்டி / சீல் / டம்ளர் / தண்ணீர் / அளவுகோல் / பென்சில் / பேனா / Sketch Pens மற்றும் எழுது பொருட்கள்.

(v) Chief / D.O/ Invigilators / J.A / O.A/ Watchman Attendance Register.

(vi) Exam Time Table தெளிவாக Print எடுத்து ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

(vii) NR Copy.

(viii) தேர்வர்களின் வருகைப் பதிவு பதிவேடு.

(ix) பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவங்கள் தினந்தோறும் தேவையான எண்ணிக்கையில் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

(x) சுவர்க்கடிகாரங்கள் புதிதாக போடப்பட்ட பேட்டரியுடன் சரியாக வேலை செய்யும் நிலையில் பார்வையில் படும்படி மாட்டப்பட்டிருக்க வேண்டும்.

(xi) ஒலிஎழுப்பும் மணி (BELL) சரியாக வேலை செய்யும் விதத்தில் இருக்க வேண்டும்.

(xii) சுத்தமான குடிநீர் வசதி.

(xiii) பார்வையாளர் வருகைப் பதிவேடு.

(xiv) பள்ளி வளாகத்தினுள் பார்வையில் படும்படி ஆலோசனைப் பெட்டி (Suggestion Box) வைத்திருக்க வேண்டும்.

(xv) பொதுத் தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கு தேர்வு எழுதும் நாட்களில் உரிய நேரத்தில் தேர்வு மையத்திற்கு சீருடையில் வருகை புரிந்து எவ்வித ஒழுங்கீன செயல்பாடுகளிலும் ஈடுபடாமல் சிறப்பாக தேர்வு எழுத வேண்டும் என்ற அறிவுரையை வகுப்பாசிரியர் / பாட ஆசிரியர் / தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தி இருக்க வேண்டும்.

30.4.22

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை.

பெறுநர்
அனைத்து தேர்வு மையத் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் (கல்வி அலுவலர் மற்றும் அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் வாயிலாக)

## மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

| நேரம் | நடைமுறை |
|---|---|
| 8.00 | தேர்வு மையத்திற்கு காலை உணவு சாப்பிட்ட பின் வருகை புரிதல் வேண்டும். |
| 8.00 – 9.00 | திருப்புதல் |
| 9.00 –9.45 | தேர்விற்குத் தயாராகுதல். |
| 9.45 | முதல் மணி – ஒரு முறை அடிக்கப்படும் – தேர்வர்கள் தேர்வறைக்கு வருகை புரிதல் வேண்டும். |
| 9.55 | இரண்டாவது மணி – இரண்டு முறை அடித்தல்<br>அறைக்கண்காணிப்பாளர் வினாத்தாள் உறைகளை மாணவர்களிடம் காண்பித்து இரு மாணவர்களிடம் கையெழுத்து பெற்று உறைகளை பிரித்தல். |
| 10.00 | மூன்றாவது மணி – மூன்று முறை அடிக்கப்படும்.<br>தேர்வர்களுக்கு வினாத்தாள் வழங்கப்படும். |
| 10.00 – 10.10 | மாணவர்கள் அமைதியாக கேள்வித் தாளை படித்து பார்க்க வேண்டும். |
| 10.10 | நான்காவது மணி – நான்கு முறை அடிக்கப்படும்<br>விடைத்தாட்கள் தேர்வர்களுக்கு வழங்கப்படும். |
| 10.10 – 10.15 | முகப்புச்சீட்டு சரிபார்த்து கையொப்பமிடுதல் |
| 10.15 | ஐந்தாவது மணி – ஐந்து முறை அடிக்கப்படும்.<br>தேர்வினை எழுதலாம். |
| 01.10 | 1. எச்சரிக்கை மணி (Warning Bell) அடிக்கப்படும்.<br>2. தேர்வர்கள் கூடுதல் விடைத்தாள் பெற்றிருப்பின் அதனை முதன்மை விடைத்தாளுடன் வெள்ளை நூல் கொண்டு கட்டுமாறு அறிவுறுத்தல். |
| 01.15 | **Long Bell**<br>தேர்வு நேரம் முடிதல் – அனைத்து விடைத்தாட்களையும் சேகரித்தல். |